DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## அமர்வு வழக்கு எண். 268/2022

**அ.சா.– 1**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. துளசி | கிராமம்: |
| க/பெ. : திரு. தமிழரசு | தாலூக்கா : |
| வயது : | தொழில்: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 13th day of February, 2024.

( எதிரிகள் 1, 2 ஆஜர். )

**முதல்விசாரணை**:–

நான் அம்மாபேட்டையில் குடியிருக்கிறேன். பலப்பட்டறை மாரியம்மன் கோவில் அருகில் துளசி வாழை இலை கடை நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பிரபு என் மகன். 1வது எதிரி ஷாலினி என்பேத்தி. 2வது எதிரியை எனக்கு தெரியாது. என்மகள் பெயர் தேவி. என்மகள் தேவியை நாமக்கல்லை சேர்ந்த கருணாநிதி என்பவருக்கு திருமணம் செய்து வைத்தேன். அவர்களுக்கு ஷாலினி, நந்தினி என்ற 2 மகள்களும், விஷால் என்ற மகனும் உள்ளனர். அவர்களில் 1வது எதிரி ஷாலினிக்கு என்மகன் பிரபுவை திருமணம் செய்துவைத்தேன். திருமணத்தின்போது என்மகனுக்கும் 1வது எதிரிக்கும் 12 வயது வித்தியாசம் இருக்கும். 1வது எதிரிக்கும் என்மகனுக்கும் நிரஞ்சனா என்ற மகள் உள்ளார்.

திருமணத்திற்கு பின்பு 1வது எதிரியும் என்மகனும் எங்கள் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம். எங்கள் வீடு 3 தளங்களை கொண்டது. தரைத்தளத்தை வாடகைக்கு விட்டுள்ளோம். சுமார் 2வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவில் என்மகன் பிரபு வீட்டின் 2வது தளத்திற்கு பாத்ரூம் சென்றுவருவதாக சொல்லி சென்றார். நானும் 1வது எதிரியும், பேத்தி நிரஞ்சனாவும் முதல்தளத்தில் டிவி

பார்த்துக்கொண்டு தூங்கிவிட்டோம். காலையில் என்மகன் பிரபுவை 2வது மாடிக்கு சென்று பார்த்தேன். என்மகன் அசைவின்றி படுத்துக்கிடந்தார். நான் உடனே என்தங்கை மகன் சரவணனுக்கு போன்மூலம் தகவல் தெரிவித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அது **அ.சா.ஆ–1.** அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை (அரசு தரப்பில்):–**

திருமணத்திலிருந்தே 1வது எதிரிக்கும், என்மகனுக்கும் இடையே இணக்கமான உறவு இல்லை என்றும், திருமணமான 6 மாதங்களில் 1வது எதிரியின் நடத்தை சரியில்லை என்றும், அதனால் என்மகன் 1வது எதிரியிடமிருந்து செல்போனை வாங்கி வைத்துக்கொண்டார் என்றும், 1வது எதிரி கல்லூரிக்கு செல்லவேண்டாம் என்று நிறுத்திவிட்டார் என்றும், 1வது எதிரி அடிக்கடி கோபித்துக்கொண்டு நாமக்கல்லில் உள்ள தன் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவார் என்றும், 02.08.2021ம் தேதி 1வது எதிரியை சமாதானம் செய்ய என்மகள் தேவி எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றும், அன்று இரவு நான், என்மகள் மற்றும் நிரஞ்சனா ஆகியோர் முதல்தளத்தில் உறங்கிகொண்டிருந்தோம் என்றும், 1வது எதிரியும் என்மகனும் 2வது தளத்திற்கு உறங்க சென்றார்கள் என்றும், அவ்வாறு சென்றபொழுது தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள கதவுகளை அடைத்துவிட்டு சென்றார்கள் என்றும், இரவு 1மணிக்கு 1வது எதிரி மாடியிலிருந்து இறங்கி வந்து யாரோ ஒரு நபர் தனது செயினை பறிக்க முயற்சி செய்கிறார் என்று சொன்னார் என்றும், உடனே நானும் என்மகளும் 2வது தளத்திற்கு சென்று பார்த்தோம் என்றும், என்மகன் பிரபு வலது உள்ளங்கையில் இரத்தக்காயமும், வலது காதில் இரத்தக்காயமும் இருந்தது என்றும், என்மகன்மீது மிளகாய்பொடி தூவப்பட்டிருந்தது என்றும், கட்டிலுக்கு அடியில் 2 தலையணைகள் கிடந்தது

என்றும், பின்பு ஆம்புலன்ஸ் தகவல் சொல்லி என்தங்கை மகன் சரவணன் அங்கு வந்து பார்த்தபொழுது என்மகன் இறந்துவிட்டதாக பரிசோதித்து சொன்னதாகவும், நான் 1வது எதிரியிடம் விசாரித்தபொழுது முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னார் என்றும், தனது நகைகளை எடுத்துக்கொண்டு வந்தநபர் தப்பித்து சென்றுவிட்டதாகவும் கூறியதால் 1வது எதிரியின்மீது சந்தேகம் ஏற்பட்டது என்றும், இரும்பு கதவுகள் பூட்டப்பட்டிருந்த நிலையில் வெளிநபர் யாரும் உள்ளே வந்திருக்கமுடியாது என்றும், 1வது எதிரி தனக்கு பழக்கத்தில் உள்ள நபருடன் வீட்டிற்குள் நுழைந்து கொலை செய்துவிட்டு நாடகம் ஆடுவதாக சந்தேகம் ஏற்பட்டு, கோபி என்பவரிடம் புகார் எழுதசொல்லி அம்மாபேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், தற்பொழுது 1வது எதிரியை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)**:–

1வது எதிரியும் என்மகனும் நல்லமுறையில் வாழ்ந்து வந்தார்கள். 1வது எதிரி என்மகனை விரும்பி திருமணம் செய்துகொண்டார். போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து ஒரு பேப்பரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

**மறுமுதல்விசாரணை** – இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 2**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. தேவி | கிராமம்: |
| க/பெ. : (லேட்) திரு. கருணாநிதி | தாலூக்கா : |
| வயது : | தொழில்: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 13th day of February, 2024.

( எதிரிகள் 1, 2 ஆஜர். )

**முதல்விசாரணை**:–

நான் நாமக்கல் மாவட்டம், கொசவம்பட்டியில் குடியிருக்கிறேன். அ.சா.–1 துளசி என் தாயார். 1வது எதிரி ஷாலினி என்மகள். 2வது எதிரியை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன பிரபு என்தம்பி. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)**:–

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில் 17 வயது மூத்த என்தம்பி பிரபுவை 1வது எதிரி என்மகள் ஷாலினிக்கு திருமணம் செய்துகொடுத்தோம் என்றும், திருமணத்திற்கு பின்பு 1வது எதிரிக்கும் அவரது கணவருக்கும் சுமூகமான உறவு இல்லை என்றும், என்மகளின் நடத்தை சரியில்லாததால் என்தம்பி என்மகளை கல்லூரிக்கு அனுப்பவில்லை என்றும், என்மகளிடமிருந்து செல்போனை வாங்கி வைத்துக்கொண்டார்கள் என்றும், என்தம்பியின் இறப்பிற்கு என்மகளின் நடத்தை தான் காரணம் என்றும்,

02.08.2021ம் தேதி இரவு மாடிக்கு என்மகள் ஷாலினியும், பிரபுவும் தூங்க சென்றார்கள் என்றும், இரவு 1.30 மணியளவில் என்தம்பியை யாரோ அடித்து கீழே தள்ளிவிட்டு என்மகளின் செயினை பறிக்க முயற்சித்ததாகவும், நானும் என்தாயாரும் மாடிக்கு சென்று பார்த்தோம் என்றும், என்தம்பியின் வலது உள்ளங்கை மற்றும் வலது காதில் இரத்தக்காயங்கள் இருந்தன என்றும், என்தம்பி மீது மிளகாய்பொடி தூவப்பட்டிருந்தது என்றும், என்தம்பி அணிந்திருந்த செயினை திருடர்கள் திருடி சென்றுவிட்டதாக 1வது எதிரி எங்களிடம் கூறினார்கள் என்றும், 1வது எதிரி முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார் என்றும், எனவே எனது தம்பியின் இறப்பிற்கு 1வது எதிரிதான் காரணமாக இருப்பார் என்று சந்தேகப்பட்டு என்தாயார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது 1வது எதிரி என்மகள் என்பதால் அவரை காப்பாற்வதற்காகவும், 2வது எதிரியை தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>:-

1வது எதிரியும் என்தம்பியும் திருமணத்திற்கு பின்பு நல்ல முறையில் எங்கள் வீட்டிற்கு வந்துசெல்வார்கள். 1வது எதிரியான என்மகள் விருப்பத்தின்பேரில்தான் என்தம்பியை திருமணம் செய்து வைத்தோம். என்தம்பிக்கு சிறுவயது முதல் காக்கா வலிப்பு நோய் இருந்தது.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.